# தமிழ் இலக்கியத்தில் விலங்கு விளையாட்டுப் பதிவுகளும் இக்கால நிலையும்

75

**கவிதா. த**

**தமிழியல் பண்பாட்டுப்புலம்**

**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.15**

**முன்னுரை**

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே விலங்குகளோடு மனிதனுக்கு உள்ள உறவு தொடங்கிவிட்டது. சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரையிலுள்ள தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுகள் குறித்த பதிவுகள் காணக்கிடைக்கின்றன. சிந்துவெளி நாகரிகத்திலும் கீழடி ஆய்விலும் காளையின் உருவம் பொறித்த ஓடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது மேலும் இதற்கு சான்று பகர்கிறது.

**வீர விளையாட்டுக்கள்**

பொதுவாக உடல் வலுவை பயன்படுத்தி விளையாடப்படும் விளையாட்டுகளும் விலங்குகள் பங்குபெறும் விளையாட்டுகளும் வீர விளையாட்டுகள் என்று அறியப்படுகின்றன. விலங்குகள் மனிதனைப் போல ஆறறிவு படைத்தவை அல்லஇ எனவே விளையாட்டின் விதிமுறைகள் அவற்றிற்குத் தெரியாது.இந்தச் சூழலில் இவ்வகை விளையாட்டுகள் ஆபத்து நிறைந்ததாகவும் விறுவிறுப்பானதாகவும் இருக்கின்றன.

"காளைக்கு தன்னோடு மனுஷன் விளையாடுகிறான் என்று தெரியாது அதற்கு விளையாட்டிலும் அக்கறை இல்லை"1 என்ற கூற்று மெய்ப்பிக்கிறது. விலங்குகளோடு மனிதன் மோதுவது ஒரு வகை என்றால் மனிதர்களுக்காக மிருகங்கள் தம்முள் மோதிக்கொள்வது மற்றொரு வகை. கோழிச்சண்டை எனப்படும் சேவல்கட்டுஇ ஆட்டுப் போர்இ யானைபோர்இகுதிரை பந்தயம் போன்றவை இதில் அடங்கும்.

விளையாட்டு என்றோ போட்டி என்றோ அறியாத மிருகங்களுக்கு அதனைப் பயிற்றுவிப்பது மனிதர்கள் தான். எனவே அவர்களின் புத்திக்கூர்மையும் தந்திரமும்தான் இவ்விளையாட்டுக்களில் வெளிப்படுகின்றன.

"முத்துச்செல்லம் குணத்திலேயே இருந்தா யாரும் ஜெயிக்க முடியாது. தப்பினா என்னவாகும் என தெரியாது... பாத்துக்கப்பு"2

மேலும் பகுத்தறிவற்ற விலங்கைத் தன் விருப்பத்திற்கு ஏற்ப பழக்கப்படுத்தும் செயல் எளிதானதல்ல. அத்துடன் இவ்விளையாட்டுக்களின் முடிவுகள் சமூகத்தில் தனிமனித மதிப்புடன் பொருத்தி பார்க்கப்படுவதால் இதன் வெற்றி தோல்விகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறிவிடுகின்றன.

“அப்பன் பேயனா இருந்தாலும் பிள்ளை கருவத்தியா இருக்கான்...எப்படி வளர்த்திருக்கான் பாரு சேவல...”3



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**இலக்கியங்களில் விலங்குப் பதிவுகள்**

சங்க இலக்கியத்தில் ஏறு தழுவுதல் குறித்த பதிவுகளை பொருநராற்றுப்படை, கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்றவற்றிலும் சேவல்கட்டு பற்றிய பதிவுகளை அகநானூறு புறப்பொருள்வெண்பாமாலை ஆகியவற்றிலும் யானைப்போர் மற்றும் ஆட்டுப்போர் குறித்த குறிப்புகள் திருக்குறளிலும் காணக் கிடைக்கின்றன. தற்காலத்தில் சிறுகதைகள்இ புதினங்கள் போன்றவை இதனைக் களமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. லா.சா.ராவின் வீரம்மாளின் காளைஇ சி. சு. செல்லப்பாவின் வாடிவாசல்இம.தவசியின் சேவல்கட்டுஇ பாலகுமார் விஜயகுமாரின் சேவல்களம் போன்றவற்றை குறிப்பிடலாம்.

**யானைப் போர்**

யானைகள் பங்குபெறும் போர்கள் குறித்து பல இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஆனால் இது ஒரு விளையாட்டாகவும் நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடக்கத்தக்கது. சங்ககால வாழ்வு போரும் காதலுமான வாழ்வு என்பதை நம் இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். போரற்ற காலங்களில் மக்கள் வீர விளையாட்டுகளில் பங்கு பெற்றனர்.

“விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து”4 என்ற குறள் இதனை மெய்ப்பிக்கிறது.

“வீர விளையாட்டில் விருப்புற்ற தமிழர் உள்ளம் விலங்குப் போர்களிலும் வேட்கையுற்றது. மத யானைகள் ஒன்றோடொன்று போரிடக் கண்டு மகிழ்ந்தனர்இதமிழ் மன்னரும் செல்வரும்.கருமலை போன்ற களிறுகள் பெருமிதமாகக் குறியிடம் போந்து பிளிரும்; வீர வெறிகொண்டு ஓடும் சாடும்; நெடுங்கரத்தால் அடிக்கும் கொம்புகளால் இடிக்கும் என்று தனது ஆராய்ச்சி தொகுதியில் மு. ராகவையங்கார் குறிப்பிட்டுள்ளமையை ரா பி சேதுப்பிள்ளை தனது தமிழர் வீரம் என்ற நூலில் மேற்கோள் காட்டியுள்ளார்5 மதுரையில் உள்ள தமுக்கம் மைதானம் யானைப் போருடன் தொடர்புடையது. 17-ஆம் நூற்றாண்டில் ராணி மங்கம்மாளின் கோடைக்கால அரண்மனை இங்கு இருந்ததாகவும் அதன் உப்பரிகையிலிருந்து யானைப் போரை அரச பரம்பரையினர் கண்டுகளித்ததாகவும் குறிப்புகள் உள்ளன.

**ஆட்டுப் போர்**

மற்றொரு விலங்கு விளையாட்டாக திகழ்ந்தது ஆட்டுப் போர். விஜயநகரப் பேரரசின் காலத்தில் இவ்விளையாட்டு முக்கியத்துவம் பெற்றிருந்தமையை தென்னிந்திய வரலாறு என்னும் நூலில் கே.கே.பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

"பொழுதுபோக்கிற்காக பல விளையாட்டுகளிலும் விழாக்களிலும் மக்கள் பங்கு கொண்டனர். வேட்டைஇ சூதாடல்இநாடகம்இதெருக்கூத்துஇகோழிப்போர்இஆட்டுப்போர்இகுதிரைப்பந்தயம் முதலிய பல பொழுதுபோக்குகள் வழக்கத்தில் இருந்தன.”6

என்றதன் மூலம் அறியலாம்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மேலும்,

" ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்

தாக்கற்குப் பேரும் தகைத்து"8

“போரிடும் ஆடுகள் ஒன்றையொன்று உருத்து நோக்கும்; எழுந்து தாக்கும்; பின்வாங்கும்; முன்னேறும்; கதித்துப் பாயும்; குதித்து முட்டும்; விலக்கினாலும் விடாது வெம்போர் விளைக்கும்”7 என தமிழர் வீரம் என்ற நூலில் ரா பி சேதுப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

ஏறுகோள்ஃசல்லிக்கட்டு

தமிழர்களின் தொன்மரபை பறைசாற்றுவதாக இருப்பது ஏறுகோள் எனப்படும் சல்லிக்கட்டு. சல்லிக்கட்டு குறித்த ஏராளமான பதிவுகள் சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கிய நூலான கலித்தொகை இதனை மிக விரிவாகவே பதிவு செய்கிறது.

“கொலை மலி சிலை செறி செயிர் அயர் சினம் சிறந்து,

உருத்து எழுந்து ஓடின்று மேல்

எழுந்தது துகள்;

ஏற்றனர் மார்பு;

கவிழ்ந்தன மருப்பு;

கலங்கினர் பலர் அவருள்இ மலர் மலி புகல் எழஇ அலர் மலி மணி புரை நிமிர் தோள் பிணைஇ

எருத்தோடு இமிலிடைத் தோன்றினன்; தோன்றி

வருத்தினான் மன்றஇ அவ் ஏறு…”8

என்ற வரிகள் ஏறு தழுவலை காட்சிப்படுத்துகின்றன. இவ்வாறு ஏழு தழுவலில் ஈடுபடும் வீரர்களை பொதுவன் என்றழைத்தனர்.

“மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி மடிவாய் தண்ணுமை நடுவண் சிலைப்பச்

சிலை நவில் எறுழ் தோள் வீசி”9 என்று ஏறுதழுவல் நடைமுறையை பெரும்பாணாற்றுப்படை குறிக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவை ஏறு தழுவுதலை பற்றிய குறிப்புகளையும் ஏறு தழுவி வெற்றி பெற்றவர்களையே பெண்கள் விரும்பியதையும் கொளு சுட்டு வில் இயம்புகிறது.

“காரி கதன் அஞ்சான்…..

……தூ நிற வெள்ளை அடத்தாற்கு உரியள்

இப்பூவைப் புது மலராள்…”10

என்ற வரிகள் வாயிலாக அறியலாம். ஏறுகோளில் வெற்றி பெற்ற ஆண்களையே அக்காலப் பெண்கள் மணந்தனர். அதாவது காளையை அடக்கியவர்களே பெண்களை மணக்க தகுதி பெற்றவராக இருந்தனர்.

சல்லிக்கட்டு வகைகள்

ஏறுதழுவுதல்இ ஏறுகோள் போன்ற பெயர்கள் தற்போது புழக்கத்தில் இல்லை. சல்லிக்கட்டு என்ற பெயரே தற்போது பொதுவாக குறிப்பிடப்படுகிறது. “காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மைஇ வாலைப் பிடித்தல் தாழ்மை என்பது தமிழர் கொள்கை”11 என்று . ரா பி சேதுப்பிள்ளை தமிழர் வீரம் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ஆண்களின் வீரத்தை பறைசாற்றவும் பெண்களை திருமணம் செய்யவும் நடைபெற்ற ஏறுதழுவுதல் தற்காலத்தில் சல்லிக்கட்டு என்று அழைக்கப்படுகிறது.புளியம்விளாரால் செய்யப்பட்ட வளையத்தை காளைகளின் கொம்புகளில் கட்டி விடுவார்கள். இதற்கு சல்லி என்று பெயர். நாளடைவில் சல்லிக்காசுகளை துணியில் முடிந்து கொம்பில் கட்டினர். காளையைச் சமாளித்து இந்த சல்லியைக் கைப்பற்றுவதே சல்லிக்கட்டு என்றானது.இது தற்போது ஜல்லிக்கட்டுஇ மஞ்சு விரட்டு என்றும் பல பகுதிகளில் வழங்கப்படுகிறது.

**சேவற்போர்**

மனிதனுக்கும் விலங்குக்கும் நடக்கும் விளையாட்டு ஏறுகோள் என்றால் மனிதர்களை பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு சேவல்களுக்கு இடையே நடை பெறுவது சேவற்போர். ஜல்லிக்கட்டை போலவே சேவற்கட்டுக்கும் நீண்ட வரலாறு உண்டு.

“பாய்ந்தும் எறிந்தும் படிந்தும் பலகாலும்
காய்ந்தும் வாய் கொண்டும் கடுஞ்சேவல்-ஆய்ந்து
நிறங்கண்டு வித்தகர் நேர் விட்ட கோழி
புறங்கண்டும் தான் வருமே போருக்கு”12 என்ற பாடல் சேவற்போரைக் குறித்து தெளிவாக விவரிக்கிறது.சேவற்சண்டையில் தேர்ந்த வல்லுனர்கள் இருந்தனர் என்பதை வித்தகர் என்னும் சொல் குறிப்பிடுகிறது. அதற்கு பழைய உரையாசிரியராகிய சாமுண்டி தேவநாயகர் கோழிநூல் வல்லவர் எனப் பொருள் தருகிறார்13

சேவல்கட்டுஇ சல்லிக்கட்டு போல தொன்மையான வரலாற்றை உடையது. மேலச்சேரி கீழச்சேரி என இரண்டு இடங்களில் சேவல் சண்டையில் வெற்றி பெற்ற சேவல்களுக்கு நடுகற்கள் கிடைத்துள்ளன. விழுப்புரம் அருகேயுள்ள அரசலாபுரம் என்ற ஊரில் முகையூர் மேலச்சேரி சேவலுக்கும் இந்தளூர் பகுதியில் கிடைத்த சேவல் கல்வெட்டில் கீழச்சேரியில் பொற்கொற்றி என்ற சேவலுக்கும் நடுகற்கள் வைக்கப்பட்டுள்ள செய்தி சேவற்போரின் பழைமையையும் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் சான்றுகளாகும்.

சேவல்கட்டில் இரண்டு வகையுண்டு. கத்திச் சண்டைஇ வெற்றுக்கால் சண்டை என்பன.கத்திக்கால் சண்டையில் ஒன்றரை அங்குலம் உள்ளஇ அதற்கென தயாரிக்கப்பட்ட கத்திகளைச் சேவலின் காலில் கட்டி ஒன்றோடொன்று மோத விடுவர். வெற்றுக்கால் சண்டையில் சேவல் கத்திக்குப் பதிலாக அவற்றின் கால் முட்கள் ஆயுதமாகச் செயல்படுகின்றது. கத்திக்கால் சண்டை பெரும்பாலும் தற்போது தடை செய்யப்பட்டு

இருக்கிறது. ஆனால் வெற்றுக்கால் சண்டை பரவலாக பல இடங்களில் நடந்து வருகிறது. கத்திக்கால் சண்டையில் நேரம்இ காலம்இ குறிபார்த்தல்இ சோதிடம் பார்த்தல் போன்றவை சேவல் கட்டில் ஈடுபடுவோரால் கடைப்பிடிக்கப்படுகிறது. "கத்திக்கட்டு சண்டையில்தான் நேரங்காலம் திசை பார்க்கிறது பட்சி பஞ்சாங்கத்தில் குறிக்கிறதுஇ பட்சி நிறம்இ சூரியன் ஏறுகிற இறங்குகிற பொழுது பார்த்து சேவல் களத்தில் விட்டதெல்லாம் வெற்றுகால் சேவல் சண்டை அது சுத்தமான ஒரு விளையாட்டு"14

**பெண்களும் வீர விளையாட்டுக்களும்**

சல்லிக்கட்டில் பெண்கள் பங்கேற்றதாக குறிப்புகள் இல்லை. ஆனால் இவ்விளையாட்டு பெண்களை மணப்பதற்காக நடைபெற்றது என்பதற்கான குறிப்புகள் உள்ளன. மேலும் இவ்விளையாட்டில் பங்கு பெரும் காளைகளை பெண்களே வளர்த்து வந்துள்ளனர்.

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்"15

என்கிறது கலித்தொகை. இதன் மூலம் இவ்விளையாட்டு பெண்களின் வாழ்வில் முக்கியமானதொரு இடத்தைப் பெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது.

சேவல் கட்டை பொருத்தவரை இவ்விளையாட்டில் ஆண்களே பங்கு பெறுகின்றனர். ஆனால் பண்டைக்காலத்தில் பெண்களாலேயே இவ்விளையாட்டு நடத்தப்பட்டது என்று தனது சேவல்கட்டு நூலில் தவசி குறிப்பிடுகிறார்.

"ஆரம்பத்தில் சேவல்கட்டு ஆடியவர்களும் பெண்கள் தான். காளைகளை ஜெயிக்க சொல்லி வாக்கப்பட்ட மாதிரி பெண்கள் வளர்த்த சேவல்களை வெற்றி கொண்டால் தான் திருமணம் எனக்கூறிய பெண்கள் ஏராளம்."16 இவ்விளையாட்டு குறித்த பல்வேறு நுணுக்கங்களையும் அறிவையும் பெண்கள் பெற்றிருந்த குறிப்புகளும் காணப்படுகின்றன.

" இந்த கட்டு சேவல் சாஸ்திரத்தை எழுதினது ஒரு பெண் தான் தெரியுமா இதை இப்ப சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டாங்க"17 உயர்ந்த இடத்தில் வைத்து போற்றப்பட்ட இவ் விளையாட்டுகளில் பெண்களின் இடம் தற்போது மிகவும் தாழ்ந்து போயுள்ளது.

**தற்கால நிலை**

சல்லிக்கட்டுக்கு எதிராக தற்கால விலங்கு நல அமைப்புகள் தடை கோரி
பல்வேறு வழக்குகளை தொடர்ந்தனர். எனவே 2016ஆம் ஆண்டு அரசு சல்லிக்கட்டுக்கு தடை விதித்தது. ஆனால் தமிழகத்தில் ஏற்பட்ட மாபெரும் போராட்டத்தாலும் பலரின் முயற்சியாலும் இத்தடை விலக்கப்பட்டது.பல்வேறு நிபந்தனைகளுடன் சல்லிக்கட்டு இப்போது ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது.

சேவல்கட்டைப் பொருத்தவரை கத்திக்கால் சண்டையின் மீது தடை உள்ளது. வெற்றுக்கால் சண்டை அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றுவருகிறது. அழிவின் விளிம்பில் உள்ளதாகவே கூறலாம்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

காரணம் இவ்விளையாட்டு சமூகத்தில் அதன் மதிப்பை இழந்து உள்ளது. சேவல்கட்டில் ஈடுபடுபவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு குறைகிறது. காரணம் அவர்கள் விளையாட்டின் போது போதைப் பழக்கங்களில் ஈடுபடுவதும்இ இதற்காக அதிக பொருட் செலவு செய்வதும்இ பந்தயம் போன்ற சூதுகளில் ஈடுபடுவதும் காரணமாக இருக்கிறது. எனவே குடும்பத்தின் பொருளாதார நிலை மோசமாக பாதிக்கப்படுகிறது. "காலம் முழுவதும் அலைந்து திரியும் கால்களின் மூளை செத்ததுதான் மிச்சம். விசிலும் மெப்பும் குடும்பத்தை பார்க்க விடாமல் செய்து விட்டது"18

தற்போது நடைபெறும் போட்டிகளில் நெறிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை."வந்த விடலைகளில் பாதிப்பேர் சேவக்கட்டு விதிகளை எதையும் மதிக்கல.தான் வச்சது தான் சட்டம் என நோக்கத்துக்கு பேசுறாங்கே…வெதும்பினார் ஆறுமுகம்".19

**முடிவுரை**

மனிதனுக்கு விலங்குகளுடனான உறவு பழங்காலம் முதல் தொடர்ந்துவரும் ஒன்று.உணவுக்காகவும்இதன்னுடைய பணிகளுக்காகவும் விலங்குகளை பயன்படுத்திய மனிதன் காலப்போக்கில் மகிழ்வுக்காகவும் விலங்குகளையே சார்ந்திருந்திருக்கிறான்.தன்னுடைய வாழ்வில் அவற்றிற்கான முக்கியத்துவத்தை விலங்கு விளையாட்டுகள் வழியாக நிலைபெறச் செய்திருக்கிறான்.முறையாக நெறிமுறைகள் வகுத்து அறம் பிறழாது அவற்றை பின்பற்றி வந்திருக்கிறான்.உடல்வலுவை நம்பிய வாழ்வு வாழ்ந்த காலத்தில் அந்த உடல் வலுவைத் தக்கவைத்துக்கொள்ள விலங்குகளோடு மோதும் விளையாட்டுகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.மனித வாழ்வில் விலங்குகளுக்கான முக்கியத்துவம் குறைந்ததனால் இன்று இவ்விளையாட்டுகளும் நலிவடைந்திருக்கின்றன.இது விளையாட்டின் வீழ்ச்சி மட்டுமல்லஇஅறத்தின் வீழ்ச்சியாகவே கருதவேண்டும்.

**குறிப்புகள்**

1.சி.சு.செல்லப்பாஇவாடிவாசல் விளம்பரம்இ எழுத்து இதழ்இ செப்டம்பர் 1959.

2.ம.தவசிஇ சேவல்கட்டுஇப.65

3.மேலது ப.95

4.குறள்.776

5.ரா.பி.சேதுப்பிள்ளைஇ தமிழர் வீரம்இப.48

6.கே.கே.பிள்ளைஇ தென்னிந்திய வரலாறு தொகுதி 2இப.84

7.ரா.பி.சேதுப்பிள்ளைஇ தமிழர் வீரம்இப.48

8.முல்லைக்கலி 19-27

9.பெரும்பாணாற்றுப்படை அடி 143)

10.கொளு சுட்டுஇஆய்ச்சியர் குரவைஇ சிலப்பதிகாரம்

11.ரா பி சேதுப்பிள்ளைஇ தமிழர் வீரம்இப.82

12.புறப்பொருள் வெண்பா மாலைஇ 348

13.பாலகுமார் விஜயராமன்இசேவல்களம்இஇப. 11

14.மேலதுஇ ப. 20

15.கலித்தொகை

16.ம.தவசிஇசேவல்கட்டுஇ ப 25

17.மேலதுஇப25

18.மேலது ப. 88

19.மேலது ப.32.

துணை நூற்பட்டியல்

1.சி.சு.செல்லப்பா

இவாடிவாசல்இகாலச்சுவடு பதிப்பகம்

2.ம.தவசிஇ

சேவல்கட்டுஇ

புதுமைப்பித்தன் பதிப்பகம்

3. பாலகுமார் விஜயராமன்இ

சேவல்களம் காலச்சுவடு பதிப்பகம்

4. ரா.பி.சேதுப்பிள்ளைஇ

தமிழர் வீரம்

சாரதா பதிப்பகம்

5. கே.கே.பிள்ளைஇ

தென்னிந்திய வரலாறு தொகுதி 2

பழனியப்பா பிரதர்ஸ்

6. கலித்தொகை

7. புறப்பொருள் வெண்பா மாலைஇ

8. பெரும்பாணாற்றுப்படை

9. சிலப்பதிகாரம்

10.திருக்குறள்